(உ) 1—6—1972-ஆம் நாளில் அல்லது அதற்குப் பிறகு நியமிக்கப் பட்ட அது போன்ற ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநரால் ஆணை பிறப்பிக்கப்பட்ட பள்ளிகள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இரண்டு.

(இ) & (உ); அந்த இரண்டு நேர்வுகளில் ஒன்று சிறப்பு நேர்வாகக் கருதப்பட்டு மானியம் தர அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்றது பற்றிய கோரிக்கை பள்ளிக் கல்வித் துறையின் ஆய்வில் உள்ளது.

Selection Grade Posts for Different Categories of Engineering Staff Members.

*135 Q.—Thiru P.R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state whether Selection Grade posts for different categories of Engineering Staff Members serving in Bifurcated Courses of Study, have been sanctioned ?

பொறியியல் ஆசிரியர்களின் வெவ்வேறு பதவித்தரங்களுக்கு தேர்வு நிலைப்பதவிகள்

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

இரு கூறுக்கப்பட்ட பாட முறைகளைப் பயிற்றுவிக்கும் பொறியியல் ஆசிரியர்களின் வெவ்வேறு பதவித் தரங்களுக்கு தேர்வு நிலைப் பதவி கள் அனுமதிக்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொருள் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, தேர்வு நிலை ஊதியம் என்பது 1970 ஆம் வருட ஊதியக் குழு பரிந்துரைகளிலே சொல்லப் பட்டதாகும். அதற்குப்பிறகு 10 ஆண்டுக்கால தேர்வு நிலை ஊதியம் அனைத்து ஆசிரியர்களுக்கும் நம்முடைய அரசு வழங்கியிருக்கிறது. ஆனால் இந்த இரு கூறுக்கப்பட்ட பாடமுறைகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர் களுக்கு மாத்திரம் இன்னும் வழங்காமல் இருக்கிறது. அது போன்று உடற் பயிற்சி ஆசிரியர்களிலே உயர் நிலையிலே இருக்கின்ற உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கும் வழங்காமல் இருக்கிறது. ஆகவே அது ஒரு குறித்த காலத்திற்குள் வழங்கப்படுவதற்கு இந்த அரசு ஒரு குறிப்பிட்ட கால அளவைத் தெரிவிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கால அளவை நான் இப்பொழுது நிர்ணயிக்கின்ற நிலையில் இல்லை. ஆனால் விரைவிலே இதற்கு ஒரு முடிவு காண வேண்டுமென்று நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். துறையினரும் இதிலே விரைவிலே முடிவு காண வேண்டும். பி. டி. க்கு சமமாக இருப்பவர்களைப் பொறுத்த அளவிற்கு, நாம் முடிவு எடுத்திருக்கிறோம். செகண்டரி கிரேடுக்குச் சமமாக இருக்கிறவர்களைப் பற்றித் தான் பிரச்சினை இருக்கிறது. அதிலே பல்வேறு பகுப்புக்கள் இருப்பதன் காரணமாக, ஒரு முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. முடிவுக்கு வந்தவுடன் அது நடைமுறைப் படுத்தப் படும்.

Cattle Farm in North Arcot District

* 136 Q.—THIRU A. BALASUBRAMANIAM (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state :

(*a*) whether the Government have examined the establishment of a Cattle Farm in North Arcot District; and

(*b*) if so, the decision taken thereon?

வட ஆற்காடு மாவட்டத்தில் கால்நடைப் பண்ணை

திரு. எ. பாலசுப்பிரமணியம் (திரு எல். பலராமன் சார்பில்): மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில், கால்நடைப் பண்ணை அரசு நிறுவ ஆராய்ந்ததா?

(இ) ஆமெனில், இது குறித்து எடுத்த முடிவு யாது?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) அதற்காக வேண்டி இடம் தேர்ந்தெடுக்கும்படியாக கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]